DINAMANI 07 JUNE 09

# கோபி பிகேஆர் கல்லூரியில் உலக சுற்றுச்சூழல் தின நிகழ்ச்சி

கோபி, ஜூன் 6: கோபி பிகேஆர் மகளிர் கலைக்கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டம் சார்பில் உலக சுற்றுச்சூழல் தின நிகழ்ச்சி, கல்லூரி முதல்வர் ஜெகதா லட்சுமணன் தலைமையில் கல்லூரி வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சியில் ஈஷா யோக மையத்தின் மரம் வளர்ப்பு திட்ட இயக்குனர் ஏ.அஷ்ரப் சிறப்பு விருந்தனராக கலந்து கொண்டு மரம் வளர்ப்பது குறித்தும் அதன் பயன்கள் குறித்தும் மாணவிகளுக்கு எடுத்துக் கூறினார். உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கோபி பவளமலை கோயிலில் மரக்கன்றுகளை நட்டார் (படம்).



நிகழ்ச்சியில் கல்லூரி செயலர் பி.என்.வெங்கடாசலம், நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள், பேராசிரியைகள் மற்றும் மாணவிகள் கலந்து கொண்டனர். கல்லூரி அருகில் உள்ள பவளமலை கோயிலைச்சுற்றி மாணவிகள் மரக்கன்றுகளை நட்டனர்.

இதற்கான ஏற்பாடுகளை கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் பேராசிரியை பிருந்தா மற்றும் என்.எஸ்.எஸ். மாணவிகள் செய்திருந்தனர்.



உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி ஈஷா யோகா மையம் சார்பில் ஈரோட்டில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், மரக்கன்றுகளை நட்டார் மேயர் குமார்முருகேஷ். இந்நிகழ்ச்சியில் சிவசுப்ரமணியன், சிவபூஷணம், சௌந்தரராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.